# இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

## பணிப்பாளர் நாயகத்தின்

# செயலாற்றுகை அறிக்கை

# 2013







# நோக்கக்கூற்று

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கி இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலை செயற்படுத்தல்

# பணிக்கூற்று

இறப்பர் பயிர்ச்செய்கை, கைத்தொழிலின் தரச்சிறப்பு, போதியளவு மேம்பாடு ஆகியனவற்றை நோக்கி சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்தல், இறப்பர் பயிர்ச்செய்கைக்கான நிதி உதவி, விவசாய உள்ளீடுகள், பரந்த சேவை அத்துடன் இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்தி.

# இலக்கு

- ❖ இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- ❖ இறப்பர் பயிர்ச்செய்கை நில அளவை அதிகரித்தல்.
- ❖ பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை பரவலாக்குவதன் மூலம் கிராமிய வறுமையை இழிவளவாக்குதல்.
- ❖ முடிவுப்பொருள் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் அந்நிய செலாவணியை அதிகரித்தல்.

# முன்னுரை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இறப்பர் காணி தொகைமதிப்பீட்டில் கிடைத்த தகவலின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் காணி பயிர்ச்செய்கையின் நில அளவு 133668 ஹெக்டெயர் ஆகும். அந் நிலப்பரப்பில் 48585 ஹெக்டெயர் சிறு இறப்பர் தோட்ட பிரிவுக்கும், 48610 ஹெக்டெயர் அரச பிரிவுக்கும் சொந்தமானது. வருடாந்த மொத்த இறப்பர் உற்பத்தி 130421 மெற்றிக்தொன் ஆவதோடு இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 14.2% குறைவினைக் காட்டுகின்றது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 48% சீட் இறப்பர் ஆவதோடு, 29% இறப்பர் பால் உற்பத்தி, 16% கிரேப் இறப்பர் உற்பத்திக்கும் 7% புளோக் இறப்பர் உற்பத்திக்கும் ஒதுக்கப்பட்டது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 18% ஏற்றுமதி செய்துள்ளதோடு எஞ்சிய 82% உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் ஊடாக நுகர்வு செய்யப்பட்டிருந்தது. (பச்சை இறப்பர்)உடன் இறப்பர் ஏற்றமதியின் மொத்தப் பெறுமதி 9194.00 மில்லியன் ரூபாய் ஆகும். மலேசியா, பாக்கிஸ்தான் மற்றும் இந்தியா, ஜேர்மனி, அமரிக்கா ஆகியன இலங்கையின் பச்சை இறப்பரை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகளாவதோடு அந்நாடுகள் கொள்வனவு செய்த இறப்பரின் அளவு மொத்த ஏற்றமதி அளவில் 80% ஆகும். 2013 ஆம் ஆண்டில் சீட் இறப்பர் கிலோவொன்றின் சராசரி விலை 376.78 ரூபாயாவதோடு அது முன்னைய வருடத்தை விட 9% விலை வீழ்ச்சியாகும்.

அரசின் தலையீட்டின் பிரகாரம் இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சியை நோக்கி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இறப்பர் உற்பத்தியின் முன்னேற்றத்திற்கு அநேகமாக உதவியாக அமைந்துள்ளன. 2013 ஆம் ஆண்டுக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 849.85 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு 801.10 மில்லியன் ரூபாய் செலவை ஏற்றுள்ளதோடு 94% சதவீதம் ஆகின்றது. அரச நாற்றுமேடைகளில் ஆண்டின் கன்று உற்பத்தி 2.23 மில்லியன் ஆனதோடு விநியோக அளவு 1.76 மில்லியன் கன்றுகளாகும்.

இதன்படி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயலாற்றுகையை அதிகரிப்பதனுள் 2013 ஆம் ஆண்டு இறப்பர் பிரிவின் வருடாந்த இலக்கினை அடைந்த சிறப்பான வருடமாகும். இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு அதிகபட்சமாக முதலீடு செய்தல், மனித, பௌதிக வளங்களை அபிவிருத்திச் செய்தல், அதிக பங்களிப்பு, ஈடுபாடு மற்றும் தொழில் திருப்தி போன்ற காரணங்களினுள் இவ்வருடத்தில் துரித வளர்ச்சியை பெற்றுள்ளது.

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிரை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொணராகலை, அம்பாந்தோட்டை, அவ்வாறே அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களுக்கும், அமைதியான சூழ்நிலையினுள் வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு செய்து வவுனியா மாவட்டத்தில் வவுனியா, நெடுங்கேணி பிரதேசங்களுக்கும், முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் புதிய இறப்பர் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு 2011 ம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2013 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்தியின் பொருட்டு அம்பாறை, மொனராகலை, பதுளை, அம்பாந்தோட்டை, வவுனியா மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் கன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக 80713 கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு ஊடுபயிர் செய்கைக்காக 21512 வாழை மற்றும் 65887அன்னாசிக் கன்றுகளும் 1271 கொடித்தோடைக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

இதற்காக பலவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

ஆர் பீ. பிரேமதாச,
பணிப்பாளர் நாயகம்,
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம

# உள்ளடக்கம


1. அறிமுகம் 1

1.1. வரலாற்றுப் பின்னணி 1-2

1.2. இறப்பர அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள். 2-3

1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் 3-5

1.4. திணைக்களத்தினது நிறுவன எண்ணிக்கை 6

1.5. திணைக்களத்தின் பணிமனை விபரங்கள். 7

2. 2013ம் ஆண்டின் செயலாற்றுகை முன்னேற்றம 8

2.1. இறப்பர் பயிர் மானிய நிகழ்ச்சித்திட்டம் 8

2.2. மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 9

2.3. ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம் 9

2.4. பயிற்சி நிகழ்ச்சித் திடடம் 10

2.5. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர் செயற்திட்டம் 10-11

2.6. திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 11-12

3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2013 13

3.1. இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு 13

3.2. உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு 14-15

3.3. உள்நாட்டு இறப்பர் நுகர்வு 15

3.4. மூலப் பொருட்களாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி 16-17

3.5. இறப்பர் விலை 18

3.6. இறப்பர் வியாபாரிகள் 19

3.7. இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை 19-20

3.8. " மஹிந்த சிந்தனையை" நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய பயிர்செய்கை உள்ளடங்கலாக இறப்பர் பயிர் செய்கையின் முன்னேற்றம். 20-25

3.9. சிறிய பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 26

3.10. இறப்பர் கன்று நாற்றுமேடையும் கன்று விநியோகமும் 26-29

3.11. ஊடுபயிர் வளர்ப்பு 29-30

3.12. மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல் 30

3.13. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை 31

3.14. சர்வதேச அமைப்புக்களிலான நடவடிக்கை 31-32

3.15. சட்ட நடவடிக்கை 32-33

3.16. மானியம் வழங்குதல் 33
3.17. விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 34-36
3.18. ஒன்றிணைந்த நிதியம் 37
3.19. செஸ் வரி தொடர்பான நடவடிக்கை 38-39
3.20. மீள் பயிரிடலுக்கான ஆலோசனை சபை 39
3.21. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் 40

4. பிரதேச அலுவலக முன்னேற்றம் 41
4.1. இறப்பர் புதிய பயிரிடல் முன்னேற்றம் 41
4.2. இறப்பர் மீள்பயிரிடல் முன்னேற்றம் 41
4.3. ஊடுபயிர்ச்செய்கை முன்னேற்றம் 42
4.4. மழைக்கவசம் இடல் 42
4.5. பால்வெட்டுவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 43
4.6. பால்வெட்டுவோருக்கான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 43
4.7. குத்தகைதாரரை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 44

5. ஏனைய நிறுவன சேவைகளை நிறைவேற்றுதல். 45

# 1. அறிமுகம்

மிக நீண்ட காலந்தொடக்கம் இலங்கைக்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் பிரதான பொருளாதார பெருந்தோட்டப் பயிரான இறப்பர் பயிர், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு சக்தி மிக்க பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளது. முக்கியமாக இலங்கையின் பதினான்கு நிர்வாக மாவட்டங்களில் இறப்பர் பயிர்செய்கை பரம்பலடைந்துள்ளதோடு, தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் இறப்பர் பயிர்செய்கை அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டுள்ளது.

## 1.1. வரலாற்றுப் பின்ணனி

இறப்பர் பயிர் ஹெவியா பிரயிசியலியன்சிஸ் (Havea brasialiensis) ஆகிய தாவரவியல் பெயரால் இனங்காணப்பட்டது. பிரேசிலில் மழைக்காடுகளில் இயற்கையாக வளர்ந்த இப்பயிர் பெற்றக்கொள்ளப்பட்ட இறப்பர் பால் இதுவரையில் முழு உலகிலேயே பெருந்தொகையான உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்பட்ட இயற்கை இறப்பர் பொருளாக விளங்குகின்றது.

பிரித்தானிய காலானித்துவ ஆட்சி காலத்தில் அதாவது 1876 ம் ஆண்டு ''ஹென்றி விக்ஹெம்'' என்ற ஆங்கிலேயரால் முதன் முதலாக கம்பஹா ஹெனரத்கொட தாவரவியல் பூங்காவில் இறப்பர் கன்று நடப்பட்டதன் மூலம் இலங்கைக்கு இறப்பர் மரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதற்கு 07 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்ட இறப்பர் பயிர்ச்செய்கை தெற்காசியா முழுவதும் பரவலடைந்து இறப்பர் உற்பத்தியானது விரைவாக முன்நோக்கிச் சென்றது. அதற்கு முரனான வகையில் இறப்பர் விலை கீழ்நோக்கிச் சென்றதனால் விலையில் ஸ்தீரத்தன்மையை உருவாக்கும் நோக்கத்துடன் 1922ம் ஆண்டில் பிரித்தானியாவால் ''ஸ்டீவன்ஸன் நடவடிக்கை முறை'' அறிமுகம் செய்யப்பட்டது. பங்கு முறைமையிலான உற்பத்தி மற்றும் பயிர்நிலப் பகுதியை வரையறை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அந்த நடவடிக்கை முறைமைக்கு இறப்பர் செய்கையாளரினாலேயே ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக அது 1928ம் ஆண்டில் கைவிடப்பட்டது. அதேவேளை மீண்டும் இறப்பர் வழங்கல் அதிகரித்து விலை குறைவடைந்ததன் பின்னர் 1934ல் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய சகல நாடுகளினதும் இணக்கத்துடன் ''International Rubber Regulation Agreement'' என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஸ்டீவன்ஸன் நடைவடிக்கைக்கு சமமான வரையறைகளை உள்ளடக்கிய அவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இறப்பர் பயிரிடும் நாடுகளில் இறப்பர் நிர்வாகத்தின் பொருட்டு அரச நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. அதற்கிணங்க ''1934 ஆம் ஆண்டு 06ம் இலக்க கட்டளைச் சட்டம்'' மூலம் இறப்பர் நிர்வாகத் திணைக்களம் அமைக்கப்பட்டது. அத்திணைக்களத்தில் முதல் இறப்பர் நிர்வாகி திரு. பி. சரவனமுத்து ஆவார்.

இறப்பர் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக ''1953ம் ஆண்டு 36 ம் இலக்கம் கொண்ட மீள் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டம்'' நடைமுறைபப்படுத்தப்பட்டது. இறப்பரினை மீண்டும் பயிரிடுவதற்கு வழிவகுக்கும் வகையில் ''1934 ஆம் ஆண்டு 06 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டு கட்டளைச் சட்டம்'' மீள் திருத்தம் செய்யப்பட்டு '' 1956 ஆம் ஆண்டு 11ம் இலக்க

இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்'' அனுமதித்துக் கொள்ளப்பட்டதோடு, அச்சட்டம் மற்றும் '' 1953ஆம் ஆண்டு இலக்க 36ம் இலக்கம்'' கொண்ட மீண்டும் இறப்பர் பயிரிடும் மானியச் சட்டத்தின் கட்டளைக்கு ஏற்ப இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் வழி நடாத்தப்படுகின்றன.

இறப்பர் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டில் அதுவரை இயங்கிய இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு மாற்றீடாக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் அமைக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதுவரை காணப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக இறப்பர் பயிர்த்துறையின் அபிவிருத்திக்கு உறுதுணை புரிந்த கருத்திட்ட சேவைகள், கன்று உற்பத்தி மற்றும் உர விநியோகம் போன்றவை மிகவும் பரந்த அளவிலான விரிவான சேவைகளை வழங்குவதற்கு இறப்பர்த் திணைக்களத்தினால் இயன்றிருந்தது.

மேலும் இத்திணைக்களத்திற்கு, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனமும், சிறுதோட்ட உரிமையாளருக்கு விற்பனை மற்றும் விஸ்த்தீரன சேவையை பெற்றுக்கொடுப்பதன் மூலம், துருசவிய நிதியத்தால் பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

## 1.2. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய முக்கியமானதும் பெறுமதியானதுமான சட்ட மூலங்கள்

### 1.2.1. 1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் மானியச் சட்டம்

இச்சட்டத்தின் இறப்பரினை மீண்டும் பயிர் செய்தல், இறப்பரினை புதிதாக பயிரிடல், ஊடுபயிர் செய்கை, தொழிற்சாலைகளை புதுப்பித்தல் மற்றும் முறைமையான கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகளை அமுலாக்குதல். மேலும் இச்சட்டத்தின் 7 வது பிரிவின் கீழ் செஸ் வரி விதிக்கப்பட்டுள்ளது.

1953ம் ஆண்டு 36 ம் இலக்க இறப்பர் மீள நடுகை நிதிச்சட்டத்தின் 7 வது பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி வரியினை அறிவிடுவதற்கு சட்டரீதியான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க வெளிநாடுகளுக்கு அனுப்பட்ட அனைத்து இறப்பர் இறாத்தலொன்றுக்குக் 10 சதம் ஏற்றுமதி வரியாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.2. 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம்

இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நாட்டிலுள்ள சகல சிறு இறப்பர் நிலையங்கள் மற்றும் இறப்பர் தோட்டங்களின் பயிர்ச்செய்கை, உரிமையாளர்கள், காணியின் பரப்பு ஆகியவை உள்ளடங்கிய அடடவணையொன்றினை நடைமுறைப்படுத்திச் செல்வது இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் யாப்புரீதியான செயற்பாடாகும். இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இறப்பர் பயிர்செய்கை இடம்பெறுகின்ற 10 ஏக்கருக்கும் அதிகமான (ஹெகடேயார் 4.04 ற்கும்

அதிகமான) இறப்பர் பயிர் செய்கை ‘‘தோட்டம்’’ ஆகவும், 10 ஏக்கருக்கு குறைந்த (ஹெக்டேயார் 4.04 ற்கும் குறைந்தது) இறப்பர் பயிர் செய்கை ‘‘சிறு காணியாகவும்’’ பொருள் கொள்ளப்படுகிறது.

### 1.2.3. 2006 ஆம் ஆண்டின் 20ம் இலக்க இறப்பர் மீள் பயிர்செய்கை மானியச் (திருத்தப்பட்டது) சட்டம்

2006ஆம் ஆண்டின் 20ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடும் மானியச் (திருத்தப்பட்டது) சட்டத்திற்கு ஏற்ப தேசிய நுகர்வுக்கு எடுக்கப்படும் பச்சையான இயற்கை இறப்பருக்கும் செயற்கை இறப்பருக்கும் செஸ் வரி அறவிடுவதற்கு ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்க செஸ் வரிக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயற்கையான பச்சை இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திக்கே செஸ் வரி அறவிடப்பட்டது.

2007ஆம் ஆண்டின் 01ம் இலக்கம் கொண்ட இயற்கை இறப்பருக்கான செஸ் வரிக் கட்டளை உள்ளடங்கிய 2007 ஆகஸ்ட் 30ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1518/18 உடைய அதிவிசேட வர்த்தமாணி பத்திரிகைக்கு இணங்க ஏற்றுமதிக்காக அல்லது தேசிய நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும், இயற்கை இறப்பர் சார்ந்த உற்பத்திக்கு தேவையான பச்சை இறப்பர் கிலோகிராம் ஒன்றிற்கு 4/- ரூபா செஸ் வரி அறவிடுவதற்கு தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு, மேற்கூறிய செஸ் வரியினை அறவிட்டுக் கொள்வதற்கான நேரடி அதிகாரம் காணப்படுகின்றது.

## 1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நிறுவனமான இத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம், இலக்கம் 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 எனும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. தலைமைக் காரியாலயத்தினால் நிர்வாகம், ஒருங்கிணைப்பு, ஸெஸ் வரியினை ஒன்று சேர்த்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மானியங்களை செலுத்துதல், கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், உரத்தினை விநியோகித்தல் மற்றும் ஆலோசனை சேவைகள் முதலான இறப்பர் பயிர்செய்கையின் அபிவிருத்திக்காக மேற்கொளள்ப்படும் சேவைகள் மக்களுக்கு மிகவும் வினைத்திறனான முறையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளன. அதற்கிணங்க 05 பிரதேச அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் பகிரப்பட்டுள்ளதோடு, அதற்கேற்ப 05 பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. கேகாலை பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்

   (கேகாலை, குருநாகலை, கண்டி, மாத்தளை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்காக )

2. களுத்துறை பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்

   (களுத்துறை மாவட்டத்திற்காக)

3. இரத்தினபுரி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்

   (இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களுக்காக)

4. காலி பிரதேச பிரதிப் பணிப்பாளர் காரியாலயம்

   (காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக)

5. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் காரியாலயம்

   (மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்காக)

மேலும் இறப்பர் பயிர் செய்கையின் பொருட்டு சிறந்த ஒட்டுமுறையிலான கன்று உற்பத்திக்காக அரசினால் 07 கன்று நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மீரிகம (கம்பஹா மாவட்டம்)
2. வெளிக்கடைமுள்ள (கம்பஹா மாவட்டம்)
3. ஏகல் ஓய (களுத்துறை மாவட்டம்)
4. குருகொடை (களுத்துறை மாவட்டம்)
5. கரப்பிஞ்சா (இரத்தினபுரி மாவட்டம்)
6. கும்புக்கன (மொனராகலை மாவட்டம்)
7. மித்தெனிய ( அம்பாந்தோட்டை மாவட்டம்)



இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை


நீர் விசிறும் முறைமையுடனான நாற்றுமேடை





இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை

## 1.4. திணைக்களத்தின் நிறுவன அமைப்பு



## 1.5. திணைக்களத்தின் பணிமனை விபரங்கள்

| தொ.இ | பதவி | அனுமதிக்கப்பட்ட பணிமனை | தற்போதைய பணிமனை |
|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம்- இலங்கை.நிர்.சே | 1 | 1 |
| 02 | பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 2 | 2 |
| 03 | பிரதான கணக்காளர்- இலங்கை.நிர்.சே | 1 | 1 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே, உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 16 | 10 |
| 05 | உதவிப்பணிப்பாளர்- இலங்கை.நிர்.சே | 1 | 1 |
| 06 | கணக்காளர்- இலங்கை.நிர்.சே | 6 | 2 |
| 07 | உதவிப்பணிப்பாளர்-தகவல் தொடர்பாடல் தொழினுட்பம். | 2 | 1 |
| 08 | உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 |
| 09 | நிர்வாக அலுவலர் | 4 | 3 |
| 10 | ஊடக அலுவலர் | 1 | 1 |
| 11 | பாதீட்டு உதவியாளர் | 1 | 1 |
| 12 | அபிவிருத்தி அலுவலர்/பட்டதாரி உதவியாளர் | 27 | 26 |
| 13 | நாற்றுமேடை முகாமையாளர் | 7 | 7 |
| 14 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர்: விசேட (உயர்வகுப்பு) | 12 | - |
| 15 | கட்டிட பராமரிப்பு அலுவலர் | 1 | - |
| 16 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 139 | 110 |
| 17 | தகவல் தொடர்பாடல் தொழினுட்ப உதவியாளர் | 5 | 2 |
| 18 | எழுதுவினைஞர் | 17 | 15 |
| 19 | கணக்காய்வு உதவியாள்ர | 2 | 1 |
| 20 | இறப்பர் அபிவிருத்தி அலுவலர் | 182 | 107 |
| 21 | அலுவலக ஊழியர் சேவை | 28 | 23 |
| 22 | சாரதி | 36 | 31 |
| 23 | லொறி உதவியாளர் | 8 | 8 |
| 24 | காவலாளி | 3 | 1 |

**ஆளணியின புள்ளிவிபர அட்டவணை i**

# 2. செயலாற்றுகை முன்னேற்றம் - 2013

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் 2013ம் வருட செயலாற்றுகை தொடர்பாக கருதும் போது, உயர்ந்த செயலாற்றுகை மூலம் இறப்பர் பிரிவில் வருடாந்த இலக்கை எய்திய விசேட வருடமாக கருத முடியும். இங்கு செயலாற்றுகையினை அதிகரித்துக் கொள்வதற்காக பங்களிப்புச் செய்த, விசேடமாக குறிப்பிடக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களாக.

- இறப்பர் பயிர்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டம்
- மழைக்கவச பாவனை நிகழ்ச்சித்திட்டம்
- ஊடுபயிர் நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன

## 2.1. இறப்பர் பயிர் மானிய செயற்திட்டம்

புதிய இறப்பர் பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 6615 ஹெக்டேயர் பரப்பு இலக்காக இருந்ததோடு அவற்றுள் 2717.87 ஹெக்டேயர் பரப்பும், மொனராகலை மாவட்டத்தில் 5000 ம் ஹெக்டயார் பரப்பும் இறப்பர் பயிர்செய்கை விசேட நிகழ்ச்சித்திட்டம் (IFAD) வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டம் இவ்வருடத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டதோடு அதனூடாக 262 ஹெக்டேயர் பயிரிடப்பட்டன. புதிய இறப்பர் பயிர்செய்கையின் பொருட்டு மானியமாக 167.73 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளன.

இறப்பர் மீள் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களின் பொருட்டு 1961 ஹெக்டேயர் இலக்காக இருந்ததோடு 1710..52 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 1587 ஹெக்டயார் பரப்பு இலக்காக இருந்ததோடு 1007 ஹெக்டயார் பயிரிடப்பட்டன. அதற்கிணங்க இறப்பர் மீள் பயிர் செய்கையின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தக் காணியின் பரப்பு 2717.52 ஹெக்டயராகும். இறப்பர் மீள்பயிர் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு மானியமாக 268.76 மில்லியன் ரூபா செலவிடபப்ட்டுள்ளன.



பயிர் மானியம் பெற்ற வெற்றிகரமான இறப்பர் பயிரொன்று

## 2.2. மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மழைக்கவசத்தினைப் பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களிற்காக 1000 ஹெக்டயார் பரப்பு இலக்காகக் காணப்பட்டதோடு அவற்றுள் 517.01 ஹெக்டயாரிற்கு மழைக்கவசங்கள் பயன்படுத்தப்பட்டன. சிறு தோட்டங்களிற்கு மானியமாக 7.73 மில்லியன் ரூபாவும் பெருந்தோட்டக் கம்பனிகளின் பொருட்டு 3000 ஹெக்டயார் பரப்பும் இலக்காக காணப்பட்டதோடு, அவற்றுள் அதிகமான அக்கரையினால் 2708.21 ஹெக்டயார் பரப்பிற்கு மழைக்கவசத்தைப் பயன்படுத்துவதற்கு மானியமாக 47.95 மில்லியன் ரூபாவும் செலவழிக்கப்பட்டன.



மழைகாப்பிடப்பட்ட இறப்பர் காணியொன்று

## 2.3. ஊடுபயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டம்

முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர்செய்கையுடன் இறப்பர் பயிர் செய்கையாளர்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக ஊடு பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 517 ஹெக்டயார் பரப்பு இலக்காக காணப்பட்டதுடன் அவற்றுள் 372.89 ஹெக்டயார் பரப்பு பயிரிடப்பட்டன. ஊடுபயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக மானியமாக 1.08 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டன.



இறப்பருடன் ஊடுபயிர் செய்யப்பட்ட காணியொன்று

## 2.4. பயிற்சி நிகழ்ச்சித் திடடம்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக சாதாரண இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒட்டுச் செய்கையாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்பன நடாத்தப்பட்டன. இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சதாரணமாக இறப்பர் பால் வெட்டுபவர்ளுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2460 ஆனதோடு அவர்களுள் 2589 நபர்கள் பயிற்சியை பூர்த்தி செய்தார்கள். சுயாதீனமாக பால்வெட்டுவோர் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அந்நபர்கள் பங்குபற்றல் போன்ற காரணங்களினால் இலக்கினை தாண்டி முன்னேற்ற அறிக்கையானது இவ்வருடத்தில் ஏற்பட்ட சுட்டிக்காட்டத்தக்கவாறான சிறப்பாகும். பால்வெட்டபவர்கள் சாதாரண இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2.00 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டுபவர்களுக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 300 ஆனதோடு அவர்களுள் 303 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்படடன. தொழில் ரீதியாக இறப்பர் பால் வெட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 3.02 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சிக்காக இலக்கு கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 240 ஆனதோடு அவர்களுள் 230 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டுமுறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 0.23 மில்லியன் ரூபா செலவழிக்கப்படடன.



இறப்பர் பால் வெட்டுபவர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்


## 2.5. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர் செயற்திட்டம

பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்களை விஸ்தரிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் மொணராகலையில் 558 ஹெக்டெயரும் அம்பாறையில் 402.93 ஹெக்டெயரும் பதுளையில் 129.63 ஹெக்டேயரும் வவுனியாவில் 36.8 ஹெக்டேயரும் அனுராதபுரவில் 3.6 ஹெக்டேயரும் பொலன்னறுவையில் 3.03 ஹெக்டெயரும் ஹம்பாந்தோட்டையில் 38.65 ஹெக்டெயரும் என்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இவ்வருடம் பயிர்ச்செய்யப்பட்ட முழு நிலப்பரப்பு 1172.64 ஹெக்டெயரும் ஆகும்.



பாரம்பரியமற்ற பிரதேசங்களில் உள்ள இறப்பர் காணி

## 2.6. வாழ்வெழுற்சி (திவிநெகும) தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்




**2.6.1.** இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெற்றிடமாகிய கன்றுகளை நடுவதற்காக 100,000 இறப்பர் கன்றுகள் இலக்காக இருந்ததோடு 80713 கன்றுகள் மொனராகலை, பதுளை, அம்பாறை, அம்பாந்தோட்டை, வவுனியா, பொலனறுவை ஆகிய மாவட்டங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக 5.61 மில்லியன் ரூபா தொகை செலவழிக்கப்பட்டது.



இறப்பர் கன்றை வழங்குதல்

**2.6.2.** முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர் செய்கைக் காணியில் ஊடு பயிராக பயிரிடுவதற்கு வாழைக்கன்றுகள் மற்றும் அன்னாசிக் கன்றுகள் இலவசமாக பெற்றுக் கொடுக்கபட்டன. இங்கு 21512 வாழைக்கன்றுகளும் 65887 அன்னாசிக் கன்றுகளுமாக மற்றும் 1271 கொடிதோடையுமாக மொத்தமாக 88670 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட தொகை 1.75 மில்லியன் ரூபாவாகும்.

**2.6.3.** இறப்பர் பால் வெட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு 50% மானியஅடிப்படையில் பால்வெட்டும் கத்திகளை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிக்காக இலக்கு ரெகள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 3020 ம் ஆக இருந்ததோடு பயிற்சியினை நிறைவு செய்த 2799 நபர்களுக்கு பால்வெட்டும் கத்திகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்காக செலவழிக்கப்பட்ட நிதி 0.81 மில்லியன் ரூபாவாகும்.



**வாழ்வெழுற்சி (திவிநெகும) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பால் கத்திகளை வழங்குதல்**

**2.6.4.** வாழ்வெழுற்சி செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆண்டு அரசினால் இறப்பர் நாற்றுமேடைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை முதல் முறையாக செயற்படுத்தியுள்ளது. இதன் கிழ் ஐந்து மாவட்டங்களில் அமைந்த 7 நாற்றுமேடைகளை இனங்கண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இதற்காக 2.82 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

# 3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - வருடம் 2013

## 3.1. இறப்பர் பயிர்செய்கை பரப்பின் அளவு

வருடாந்த இறப்பர் பயிர்செய்கை காணியின் பரப்பானது அதிகரிப்பை காட்டி நிற்கிறது. 2013ம் ஆண்டில் நாடு முழுவதும் மதிப்பிடப்பட்ட மொத்த இறப்பர்க் காணியின் அளவு 2010ம் ஆண்டில் நிலவிய இறப்பரக்காணிக் கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது.

**இறப்பர் பயிர்செய்கை நில அளவு - 2013ஆம் ஆண்டில்**

| | தனியார் துறை (20 ஹெக்டயாருக்கும் குறைந்த நிலம்) ஹெக் | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி (20 ஹெக்டயாருக்கும் கூடுதலான இடம்) ஹெக் | மொத்தம் ஹெக் |
|---|---|---|---|
| 2010ம் ஆண்டில் இறப்பர் காணி கணக்கெடுப்பில் அறிக்கையிடப்பட்ட காணியின் அளவு | 79395 | 46250 | 125645 |
| 2011ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 80018 | 48516 | 128534 |
| 2012 ம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 82170 | 48610 | 130780 |
| 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட காணியின் அளவு | 85083 | 48585 | 133668 |

**புள்ளிவிபர அட்டவணை ii**

இறப்பர் பயிர் செய்கை இடம்பெறும் நில அளவில் 63.65% சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துண்டுகள் அடிப்படையிலும், எஞ்சியவை பெருந்தோட்டக் கம்பனித் தோட்டங்களாகவும் இருக்கின்றன. இப்பயிர் நில அளவில் முதிர்ச்சியடையாத பயிருள்ள காணியின் அளவு 29098 ஹெக்டயராகவும், பால் வெட்டுகின்ற முதிர்ச்சியடைந்த காணியின் அளவு 104570 ஹெக்டயராகவும் மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அப்பயிர் செய்கையிலிருந்து பெற்றுக் கொண்ட மொத்த உற்பத்தியின் அளவு 130421 மெட்றிக் தொன்னாகும். 2013ம் வருடத்தில் ஒரு ஹெக்டயாரிலிருந்து பெற்றுக் கொண்ட வருடாந்த அறுவடை காய்ந்த இறப்பர் 1247 கிலோகிராமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## 3.2. உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவு

### 3.2.1. உற்பத்தி

2013 ஆம் வருடத்தின் மொத்த இறப்பர் உற்பத்தி 130421 மெட்றிக்தொன்னாகும். இது கடந்த வருடத்தின் மொத்த உற்பத்தியான 152049 மெட்றிக்தொன்னுடன் அளவிடும் போது ஒப்பீட்டு ரீதியில் 14.2% குறைவினைக் காட்டுகிறது. இவ்வாறு உற்பத்தி குறைவிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணி 2012 ஆம் ஆணடிற்கு ஒப்பீடாக இறப்பரின் விலை வீழ்ச்சியடைந்தமையேயாகும்.

**2013 ஆம் ஆண்டின் மொத்த இறப்பர் உற்பத்தி (மெட்றிக்டொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் கிரேப் | சோல் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் T.S.R | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 59242 | 1280 | 1902 | 36550 | 8672 | 44403 | 152049 |
| 2013 | 62800 | 2379 | 2440 | 15373 | 9566 | 37863 | 130421 |

**புள்ளிவிபர அட்டவணை iii**





**கிரேப் இறப்பர் உற்பத்தி**

### 3.2.2. உற்பத்திச் செலவு

ஒரு கிலோ உலர்ந்த இறப்பரின் உற்பத்திக்காக 2013 ஆம் வருடத்தில் தனியார் துறையினரின் சாதாரண உற்பத்திச் செலவு ரூபா: 150.00 ஆகும். இது கடந்த வருட உற்பத்திச் செலவாகிய ரூபா: 136.00 உடன் ஒப்பிட்டும் போது ரூபா: 14.00 அதிகரிப்பினைக் காட்டுகின்றது. உற்பத்திச் செலவானது 2002 ம் ஆண்டு தொடக்கம் அதிகரித்துச் செல்லகின்ற முறையினைக் புள்ளிவிபர அட்டவணை iv காட்டுகின்றது.


**இறப்பர் உற்பத்திச் செலவு**

*( 01 கி.கிராம் 1/ ரூபா)*

| ஆண்டு | பெருந்தோட்டக் கம்பனி | தனியார் துறை |
|---|---|---|
| 2002 | 55.74 | 54.00 |
| 2003 | 59.76 | 63.30 |
| 2004 | 65.98 | 73.37 |
| 2005 | 72.56 | 77.37 |
| 2006 | 87.65 | 97.20 |
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |
| 2013 | 245.00 | 150.00 |

**புள்ளிவிபர அட்டவணை iv**

**இறப்பர் உற்பத்திச் செலவு 2002-2013**




## 3.3. உள்நாட்டு இறப்பர் நுகர்வு

இந்நாட்டில் உற்பத்திச் செய்யப்பட்ட இயற்கை இறப்பர் கடந்த காலங்களில் முக்கியமாக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதியான தொழில்நுட்ப மூலப்பொருளாக இருந்ததோடு, தற்போது இந்நிலைமை மாற்றமடைந்து உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக அதிகமான அளவில் இறப்பரினை பயன்படுத்தும் தன்மையினை காண முடியும். அதற்கிணங்க 2013 ஆண்டில் இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 107259 மெட்றிக் டொன்னாகும். இந்த அளவு 2013ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த இறப்பர் 130421 மெட்றிக் டொன்னில் 82% ஆகும்.

## 3.4. மூலப் பொருட்களாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி


கடந்த 2013 ஆம் ஆணடுடன் ஒப்பிடுகையில் 2013 ஆண்டில் இலங்கையில் இறப்பர் எற்றுமதியில் சுட்டிக்காட்டத்தக்கவாறு வீழ்ச்சி ஏற்பட்டள்ளது.

**2012 2012, 2013 ஆண்டுகளில் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு**

| மாதம் | கப்பலில் ஏற்றிய அளவு (மெட்றிக் டொன்) | |
|---|---|---|
| | 2012 ஆம் ஆண்டு | 2013 ஆம் ஆண்டு |
| ஜனவரி | 4053 | 2606 |
| பெப்ரவரி | 4940 | 2535 |
| மார்ச் | 5994 | 2373 |
| ஏப்ரல் | 3524 | 1793 |
| மே | 2342 | 1247 |
| ஜுன் | 1731 | 1225 |
| ஜுலை | 1391 | 1213 |
| ஆகஸ்ட் | 1778 | 1799 |
| செப்டம்பர் | 2988 | 1912 |
| ஒக்டோபர் | 2637 | 2082 |
| நவம்பர் | 2470 | 1937 |
| டிசம்பர் | 3529 | 2864 |
| **மொத்தம்** | **37377** | **23586** |

**புள்ளிவிபர அட்டவணை V**

**இறப்பர் ஏற்றுமதி 2012-2013**




2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் எற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**2012 மற்றும் 2013 ஆண்டில் ஏற்றுமதி செயய்ப்பட்ட இறப்பரின் அளவு வகை அடிப்படையில்**

**(மெற்றிக் தொன்)**

| வருடம் | சீட் இறப்பர் | சோல் கிரேப் | ஸ்கிரேப் கிரேப் | லெடெக்ஸ் கிரேப் | புலோக் இறப்பர் (T.S.R) | லெடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 11235 | 1401 | - | 17431 | 4669 | 2641 | **37377** |
| 2013 | 4574 | 2022 | 17 | 13171 | 2397 | 1405 | **23586** |

**புள்ளிவிபர அட்டவணை vi**

மொத்த ஏற்றுமதி இறப்பரில் க.ஏ.செ பெறுமதி அட்டவணை vii இல் காட்டப்பட்டுள்ளது.

## மொத்த ஏற்றுமதி இறப்பர் அளவில் க.ஏ.செ பெறுமதி

**(ரூபா மில்லியன்)**

| வருடம் | ஏற்றுமதித் தொகை மெட்றிக் டொன் | மொத்தப் பெறுமதி ரூபா மில்லியன் | கிலோ.கிராம் 01ன் பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| 2012 | 37377 | 15726.00 | 421.00 |
| 2013 | 23586 | 9194.00 | 390.00 |

**புள்ளிவிபர அட்டவணை vii**

இறப்பர் ஏற்றுமதியானது பிரதானமாக தனியார் துறையினால் மேற்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் பதிவுசெய்யப்பட்ட 135 ஏற்றுமதியாளர்கள் இருக்கிறார்கள். அந்த ஏற்றுமதியாளர்கள் 135 பேரும் இத்திணைக்களத்தில் 2013 ஆம் வருடத்திற்காக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**இறப்பரினை கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் 2013**

**(மெட்றிக் டொன்)**

| நாடு | கொள்வனவு செய்த தொகை | % |
|---|---|---|
| மலேசியா | 4976 | 21 |
| ஐரோப்பிய சங்கம் | 4094 | 17 |
| பாகிஸ்த்தான் | 4652 | 20 |
| இந்தியா | 2600 | 11 |
| அமரிக்கா | 1008 | 4 |
| ஹொங்கொங் | 182 | 1 |
| ஜப்பான் | 1679 | 7 |
| ஏனைய நாடுகள் | 4395 | 19 |
| **மொத்தம்** | **23586** | **100.0** |

**புள்ளிவிபர அட்டவணை viii**

### 3.5. இறப்பரின் விலை

அகில மொத்த தேசிய உற்பத்தியில் மந்தமான வளர்ச்சியால் 2011 ஆம் ஆண்டிலிருந்து இறப்பர் விலை பின்வருமாறு.


**இறப்பர் வகைக்கு ஏற்ப சாதாரண விலை**

*(1 கிலோ ரூபா)*

| வருடம் | வருடாந்த சாதாரண விலை | | |
|---|---|---|---|
| | சீட் இறப்பர் இலக்கம் 1 | ஸ்கிரேப் இறப்பர் இலக்கம்.11XBR | லேடெக்ஸ் கிரேப் இலக்கம்: 1X |
| 2012 | 416.61 | 377.09 | 410.84 |
| 2013 | 376.78 | 309.04 | 397.33 |

**புள்ளிவிபர அட்டவணை ix**

**வருடாந்த சாதாரண விலை**



## 3.6. இறப்பர் வியாபாரிகள்

இறப்பர் விற்பனைக்காக அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் கட்டாயத்தேவையாக இருப்பதோடு 2013 ஆம் ஆண்டில் இறப்பர் விற்பனையாளர்கள் 1189 பேரிற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட மாவட்டம் என்ற ரீதியில் அவ்விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

| மாவட்டம் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | புதிதாக விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 54 | 04 |
| கம்பஹா | 35 | 02 |
| களுத்துறை | 331 | 45 |
| இரத்தினபுரி | 241 | 16 |
| கேகாலை | 400 | 23 |
| குருநாகலை | 08 | - |
| கண்டி | 08 | 01 |
| மாத்தளை | 03 | - |
| காலி | 65 | 05 |
| மாத்தறை | 25 | - |
| மொனராகலை | 19 | 10 |
| மொத்தம் | **1189** | **106** |

**புள்ளிவிபர அட்டவணை x**

## 3.7. இறப்பர் மீள் பயிரிடல் / புதிய பயிர் செய்கை மானிய முறைமை

மானியமுறைமையின் கீழ் இறப்பர் பயிர் செய்கையினை மீண்டும் அல்லது புதிதாக பயிரிடுவதற்காக 1953ம் ஆண்டின் 36ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள் பயிரிடல் சட்டத்தின் 07ம் பிரிவுக்கு இணங்க அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இச்சட்டத்தின்படி அணைத்து இறப்பர் காணிகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட இறப்பர் காணியில் இருக்கின்ற பயிரானது 20 வயதினை அடைந்ததன் பின்னர் அவ்விடம் முானியமுறைமையின் கீழ் மீண்டும் பயிர் செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை பெறும்.

இறப்பர் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் ஊக்கக் கொடுப்பனவிற்காக ஹெக்டயார் ஒன்றுக்கு ரூபா: 125,000/- ஆன மீள் பயிர் செய்கை / புதிய பயிர் செய்கை மானியத் தொகை 2011ம் ஆண்டில் பினவருமாறு அதிகரிக்கப்பட்டது.

இறப்பரினை புதிதாக பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா: 150,000

இறப்பரினை மீள் பயிரிடுவதற்காக ஹெக்டயாருக்கு ரூபா 175,000

இந்த நன்கொடை 08 தவணைகளில் வழங்கப்படும். தவணை செலுத்தப்படும் முறை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **தவணை** | **புதிய பயிர்ச்செய்கை ஹெக்டேயருக்கு (தொகை ரூபாயில்)** | **நாற்றுமேடை பயிர்ச்செய்கை ஹெக்டேயருக்கு (தொகை ரூபாயில்)** |
|---|---|---|
| முதலாம் தவணை (1) | 6,000.00 | 8,000.00 |
| இரண்டாம் தவணை (2) | 36,000.00 | 43,000.00 |
| மூன்றாம் தவணை (3) | 12,000.00 | 15,000.00 |
| நான்காம் தவணை (4) | 18,000.00 | 21,000.00 |
| ஐந்தாம் தவணை (5) | 18,000.00 | 21,000.00 |
| ஆறாம் தவணை (6) | 18,000.00 | 21,000.00 |
| ஏழாம் தவணை (7) | 19,000.00 | 22,000.00 |
| எட்டாம் தவணை (8) | 23,000.00 | 24,000.00 |
| **மொத்தம்** | **150,000.00** | **175,000.00** |

**புள்ளிவிபர அட்டவணை xi**

## 3.8. "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மற்றும் அரச மத்தியகால பொருளாதார திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிய பயிரிடல் உள்ளிட்ட இறப்பர் பயிர்ச்செய்கையின் முன்னேற்றம். "

''மஹிந்த சிந்தனை பயிர்ச்செய்கைக்கோர் உதயம்'' நிகழ்ச்சியின் கீழ் இறப்பர் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு இறப்பர் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக செய்யப்பட்டவை பின்வருமாறு அமைகின்றது. அதற்றிணங்க இந்நாட்டின் இறப்பர் கைத்தொழிலை சக்தி வாய்ந்த பொருளாதார கருத்திட்டமாக நடாத்திச் செல்வதற்காக வயதான, காலம் கடந்த மற்றும் பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறனற்ற இறப்பர் பயிரினை நீக்கி அவ்விடத்தில் மீண்டும் பயிர்செய்தல் வேண்டும். உற்பத்தித்திறன் வாய்ந்த பயிர்செய்கையினை நடாத்திச் செல்வதற்காக மொத்த இறப்பர் நிலக் காணியில் 3% ல் ஆவது வருடாந்தம் மீண்டும் பயிர் செய்யப்படுதல் வேண்டும். அந்நில அளவு அன்னளவாக 4000 ஹெக்டயராகும். 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மீள் பயிர்/ புதிதாக பயிர் செய்யும் இறப்பர் காணியின் அளவு 10163 ஹெக்டயராகும். 2013 ஆம் ஆண்டில் மீள் பயிர் செய்வதற்காக எதிர்பார்த்த நிலத்தின் அளவு தனியார் துறையில் 1961 ஹெக்டயராகவும் மற்றும் அரச தோட்டத் துறையில் 1587 ஹெக்டயராகவும் 3548 ஹெக்டயராகும். வருடத்தினுள் எதிர்பார்த்த புதிய பயிர் செய்கையின் அளவு தனியார் தறையில் சம்பிரதாய பூர்வமான

பிரதேசங்களில் 2320 ஹெக்டயராகவும், சம்பிரதாய பூர்வமற்ற பிரதேசங்களில் 4295 ஹெக்டயராகவும் மொத்தமாக 6615 ஹெக்டயராகும்.

மீள் பயிர் செய்கை மற்றும் புதிய பயிர் செய்கை மாணிய உதவி முறைமையின் கீழ் பயிரிடுதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், விநியோகித்த அனுமதி பத்திரங்கள் மற்றும் பொருத்தமான முறையில் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு புள்ளிவிபர அட்டவணை xii மற்றும் xiii குறிப்பிடப்பட்டுள்ளன.

**இறப்பர் மீள் பயிர் செய்கை மானிய உதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்-2013**

*(ஹெக்டேயார்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | மீள் பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டேயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) |
| களுத்துறை | 1361 | 908.34 | 1282 | 769.78 | 862 | 516.29 |
| கேகாலை | 1280 | 780.04 | 1197 | 697.95 | 893 | 531.10 |
| கம்பஹா | 176 | 105.83 | 142 | 100.73 | 128 | 93.74 |
| குருநாகலை | 52 | 55.06 | 33 | 45.06 | 25 | 35.32 |
| கண்டி | 61 | 42.93 | 59 | 35.69 | 54 | 32.19 |
| மாத்தளை | 11 | 35.76 | 06 | 22.66 | - | - |
| இரத்தினபுரி | 560 | 404.91 | 504 | 369.83 | 380 | 265.73 |
| காலி | 103 | 72.83 | 92 | 65.59 | 66 | 62.69 |
| மாத்தறை | 90 | 77.46 | 64 | 66.78 | 40 | 38.37 |
| மொனராகலை | 07 | 12.88 | 07 | 12.88 | - | 10.00 |
| பதுளை | 01 | 7.89 | 1 | 7.89 | | |
| கொழும்பு | 229 | 164.60 | 220 | 147.82 | 174 | 125.09 |
| **மொத்தம்** | **3931** | **2668.53** | **3607** | **2342.66** | **2622** | **1710.52** |

**புள்ளிவிபர அட்டவணை xii**

**புதிய இறப்பர் பயிர் செய்கை மானிய உதவி முறைமையின் கீழ் மீள் பயிரிடப்பட்ட காணியின் அளவு (சிறுதோட்ட உரிமையாளர்கள்) வருடம்- 2013**

**(ஹெக்டயார்)**


| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்ப பத்திரங்கள் | | வியோகிக்கப்பட்ட அனுமதி பத்திரங்கள் | | புதிதாக பயிர் செய்யப்பட்ட காணியின் அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணியின் அளவு (ஹெக்டயர்) |
| களுத்துறை | 881 | 419.05 | 854 | 385.89 | 585 | 269.09 |
| கேகாலை | 1195 | 632.40 | 1176 | 551.56 | 889 | 439.30 |
| கம்பஹா | 230 | 124.19 | 185 | 100.03 | 145 | 86.11 |
| குருநாகலை | 205 | 132.60 | 200 | 119.58 | 120 | 79.98 |
| கண்டி | 104 | 58.08 | 72 | 32.90 | 63 | 26.57 |
| மாத்தளை | 36 | 38.00 | 26 | 30.48 | 17 | 14.73 |
| இரத்தினபுரி | 635 | 438.75 | 803 | 525.74 | 503 | 339.88 |
| காலி | 326 | 199.37 | 295 | 178.95 | 157 | 89.48 |
| மாத்தறை | 348 | 212.43 | 295 | 188.17 | 188 | 127.59 |
| அம்பாந்தோட்டை | 149 | 92.16 | 139 | 84.17 | 72 | 38.65 |
| கொழும்பு | 143 | 87.21 | 160 | 87.32 | 131 | 72.50 |
| மொனராகலை | 1426 | 876.50 | 1237 | 766.80 | - | 558.00 |
| பதுளை | 287 | 362.42 | 232 | 146.39 | - | 129.63 |
| அம்பாறை | 487 | 396.12 | 487 | 402.93 | - | 402.93 |
| வவுனியா | 149 | 116.21 | 142 | 103.25 | 63 | 36.80 |
| முல்லைத்தீவு | 9 | 2.83 | 9 | 2.83 | - | - |
| அநுராதபுரம் | 5 | 5.26 | 5 | 5.26 | 3 | 3.60 |
| பொலநறுவை | 3 | 3.47 | 3 | 3.47 | 2 | 3.03 |
| **மொத்தம்** | **6618** | **4197.05** | **6320** | **3715.72** | **2938** | **2717.87** |

**புள்ளிவிபர அட்டவணை xiii**

**இறப்பர் மீன் பயிரிடல் நிவாரண முறையின் கீழ் மீன் பயிரிட்ட நிலப்பரப்பு (தோட்டப்பிரிவு)**

| பிரதேச் அலுவலகம் | மீன் பயிரிட்ட நிலப்பரப்பு (ஹெக்டயார்) |
|---|---:|
| இரத்தினபுரி | 236.40 |
| களுத்துறை | 71.50 |
| கேகாலை | 645.60 |
| காலி | 18.30 |
| மொனராகலை | 35.20 |
| **மொத்தம்** | **1007** |

**புள்ளிவிபர அட்டவணை xiv**



**மீள் பயிரிடப்பட்ட இறப்பர்க் காணியின்அளவு 1990-2013**

(ஹெக்டயர்)

| வருடம் | தனியார் துறை | பெருந்தோட்டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 3584 | 1617 | 5201 |
| 1991 | 3507 | 1794 | 5301 |
| 1992 | 2028 | 1889 | 3917 |
| 1993 | 2419 | 2817 | 5236 |
| 1994 | 1623 | 2138 | 3761 |
| 1995 | 1778 | 1461 | 3239 |
| 1996 | 1983 | 1217 | 3200 |
| 1997 | 1172 | 2045 | 3217 |
| 1998 | 1173 | 2542 | 3715 |
| 1999 | 665 | 3866 | 4531 |
| 2000 | 770 | 1853 | 2623 |
| 2001 | 558 | 4584 | 5142 |
| 2002 | 712 | 2066 | 2778 |
| 2003 | 565 | 494 | 1059 |
| 2004 | 819 | 1264 | 2083 |
| 2005 | 1257 | 2329 | 3586 |
| 2006 | 1122 | 2331 | 3453 |
| 2007 | 993 | 4199 | 5192 |
| 2008 | 812 | 5293 | 6105 |
| 2009 | 1002 | 5360 | 6362 |
| 2010 | 1186 | 4755 | 5941 |
| 2011 | 1123 | 1927 | 3050 |
| 2012 | 1117 | 1044 | 2161 |
| 2013 | 1710 | 1007 | 2717 |

**புள்ளிவிபர அட்டவணை XV**

புதிதாக பயிரிடப்பட்ட இறப்பர் காணியின்அளவு 1990-2013

(ஹெக்டேயார்)

| வருடம் | தனியார் துறை | பெருந்தோட்டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 1039 | 258 | 1297 |
| 1991 | 1602 | 202 | 1804 |
| 1992 | 612 | 302 | 914 |
| 1993 | 907 | 135 | 1042 |
| 1994 | 670 | 37 | 707 |
| 1995 | 651 | 45 | 696 |
| 1996 | 1208 | 35 | 1243 |
| 1997 | 793 | 21 | 814 |
| 1998 | 516 | 17 | 533 |
| 1999 | 223 | 48 | 271 |
| 2000 | 243 | 34 | 277 |
| 2001 | 150 | 14 | 164 |
| 2002 | 227 | 7 | 234 |
| 2003 | 451 | 7 | 458 |
| 2004 | 518 | 5 | 523 |
| 2005 | 1032 | 11 | 1043 |
| 2006 | 1603 | 297 | 1900 |
| 2007 | 1701 | 333 | 2034 |
| 2008 | 2130 | 414 | 2544 |
| 2009 | 1156 | 275 | 1431 |
| 2010 | 1317 | 96 | 1413 |
| 2011 | 2166 | 838 | 3004 |
| 2012 | 2297 | 179 | 2476 |
| 2013 | 2979 | - | 2979 |

புள்ளிவிபர அட்டவணை xvi

## 3.9. சிறிய பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மொணராகல மாவட்டத்தில் 5000 ஹெக்டயாரில் பயிர்ச்செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கை இவ்வருடத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க மொணராகல மாவட்டத்தில் பிபிலை, படல்கும்புர, மொணராகலை, மடுல்ல மற்றும் மெதகம போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஆதற்கிணங்க 2013 ஆம் ஆண்டில் 262 ஹெக்டயாரில் பயிர்ச்செய்யப்படுகிறது.

அவ் 5000 ஹெக்டெயரிலான பயிர்ச்செய்கை பின்வரும் அட்டவணையில் வருமாறு

| **ஆண்டு** | **பயிரிடப்பட்ட இறப்பர் காணியின்அளவு (ஹெக்டயார்)** |
|---|---|
| 2008 | 625 |
| 2009 | 838 |
| 2010 | 1540 |
| 2011 | 709 |
| 2012 | 1113 |
| 2013 | 262 |
| **மொத்தம்** | **5087** |

**புள்ளிவிபர அட்டவணை xvii**

## 3.10. இறப்பர் கன்று நாற்றுமேடையும் கன்று விநியோகமும்

கடந்த காலங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையால் பயிர்ச்செய்கையாளரின் அக்கறை அதிகரித்துள்ளது. இதனால் இறப்பர் கன்றுகளின் கேள்வி தொடர்ச்சியாக உயர்ந்துள்ளது. இதனால் கன்று உற்பத்திக்கு விசேட கவனத்தை திணைக்களம் செலுத்துகிறது. அதற்காக திணைக்களத்தில் இறப்பர் நாற்றுமேடைகளும் தனியார் இறப்பர் நாற்றுமேடைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனியார் இறப்பர்கன்று நாற்று மேடைகள் மற்றும் வர்த்தக இறப்பர்கன்று நாற்று மேடைகளை அமைப்பதற்காக திணைக்களதத்தின் அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆரம்ப கட்டத்தில் இந்த நாற்று மேடைகளில் உயர் தரத்திலான ஒட்டுக் கிளை நாற்று மேடைகளை அமைப்பதற்காக தேவையான நடுகைப்பொருள் திணைக்களத்தின் நாற்றுமேடைகளிலிருந்து வழங்கப்படும்.


### 3.10.1. தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடைக்கான அனுமதிப் பத்திரம் - 2013

உயர்தரத்து ஒட்டுமுறை இறப்பர் கன்றுகளை பயிர்செய்கையாளருக்கு பெற்றுக் கொடுப்பது திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். திணைக்கள நாற்றுமேடைகளில் கன்று உறபத்தி பொக்கினை அதிகரித்தல் கன்றின் பண்பினை மேலும் அதிகரித்தல் மற்றும் நாற்றுமேடை உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் நோக்கில் நாற்றுமேடை அபிவிருத்தி நடவடிக்கைகளை் பல திணைகக்ளத்தினால் மேற்கொள்ளப்பட்டன. தனியார் துறை நாற்றுமேடைகள் உயர்தர கன்று உற்பத்திக்காக பயன்படத்தவது திணைக்களத்தின் பொறுப்பாகும். சிபாரிசு செய்யப்பட்ட முறைக்கமைய அமைக்கப்பட்டுள்ள நாற்று மேடைஅ தொடரபாக அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட தனியார் நாற்றுமேடை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் அடிக்கடி மேற்பார்வைக்கு உள்ளாவதோடு நாற்று மேடையை பரிந்துரைக்கப்ட்ட நடாத்திச் செல்வதற்கு தேவையான ஆலோசனையும் பெற்றுக கொடுக்கபபடகிறது. இக்கன்று நாற்றுமேடை பரிந்துரைகக்பட்ட முறைக்கு நடாத்தப்பட்டுச் செல்கிறதா என்ற விடயங்கள் இறப்பர் அபிவிருத்தி அலுவலரினால் மேற்கொள்ளப்படும்.

**அரச நாற்று மேடைகளின் கன்று உற்பத்தி மற்றும் கன்றுளின் விநியோகம் - 2012**

| நாற்று மேடையின் பெயர் | நாற்றுமேடைக்குரிய மாவட்டம் | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கரப்பிஞ்சா | இரத்தினபுரி | 188738 | 126786 |
| மீரிகம | கம்பஹா | 284747 | 221673 |
| வெலிகடமுல்ல | கம்பஹா | 459372 | 410123 |
| ஏகல்ஓய | களுத்துறை | 393302 | 331460 |
| கும்புக்கன | மொணராகலை | 508919 | 364843 |
| குருகொடை | களுத்துறை | 286754 | 211933 |
| மித்தெனிய | அம்பாந்தோட்டை | 109497 | 98875 |
| **மொத்தம்** | | **2231329** | **1765693** |

**புள்ளிவிபர அட்டவணை xviii**




2013ம் ஆண்டில் திணைக்கள நாற்றுமேடைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கன்றுகளின் உற்பத்தி 2.35 மில்லியன் ஆகும். வருடத்தின் கன்றுகளின் மொத்த உற்பத்தி 2.23 மில்லியன் ஆவதோடு வருடத்தினுள் பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 1.76 மில்லியன் மட்டுமேயாகும்.

**கன்று உற்பத்தி ( தனியார் நாற்றுமேடை) - 2013**

| பிரதேச அலுவலக அதிகாரப்பிரிவு | பதிவு செய்யப்பட்ட நாற்றுமேடைகளின் எண்ணிக்கை | கன்று விநியோகம் |
|---|---|---|
| கேகாலை | 59 | 45450 |
| கும்பஹு | 06 | 3835 |
| களுத்துறை | 02 | 119900 |
| மொணராகலை | 17 | 155088 |
| காலி | 15 | 9415 |
| முாத்தறை | 10 | 19400 |
| இரத்தினபுரி | 16 | 166330 |
| கொழும்பு | 08 | 6500 |
| பதுளை | 03 | - |
| **மொத்தம்** | **136** | **525918** |

**புள்ளிவிபர அட்டவணை xix**

திணைக்கள கன்று நாற்றுமேடைகளைப் போல தனியார் துறையின் நாற்று மேடைகளிலும் அதிகமாக RRIC 121 குளோனிலான கன்று விநியோகிக்கப்பட்டதோடு கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது RRISL 203 குளோனிலான உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டது.

## 3.11. ஊடுபயிர் வளர்ப்பு

இறப்பருடன் ஊடுபயிர் பயிரிடும் சிறு நில உரிமையாளர்களுக்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்படி ஏக்கருக்கு 4000.00 ம் ரூபா மானிய உதவி வழங்குதல் இத்திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் 2013ஆம் ஆண்டில் ஊடுபயிர மானியமாக 1.08 மில்லியன் ரூபாய் தொகை செலுத்தப்பட்டது.




**இறப்பருடன் ஊடுபயிர**

**2013 ஆம் ஆண்டில் துணைப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலத்தின் அளவு**

| மாவட்டம் | பயிர்செய்கையின் நிலப் பரப்பு (ஹெக்டயார்) |
|---|---|
| கேகாலை | 93.09 |
| கம்பஹா | 78.99 |
| குருநாகலை | 37.68 |
| கண்டி | 4.63 |
| களுத்துறை | 57.55 |
| இரத்தினபுரி | 31.12 |
| கொழும்பு | 33.76 |
| காலி | 6.72 |
| மாத்தறை | 15.78 |
| அம்பாந்தோட்டை | 13.57 |
| **மொத்தம்** | **372.89** |

**புள்ளிவிபர அட்டவணை xx**




## 3.12. மழைக்கவச பாவனையை பிரபல்யப்படுத்தல்

முதிர்ந்த இறப்பர் பயிர்ச்செய்கை காணிகளில் விளைச்சலை அதிகரிப்பதற்காக இறப்பர் பயிர்ச்செய்பையாளர்களைள் மழைக்கவசத்தை பயன்படுத்த ஆர்வமூட்டுவதற்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வெற்றிகரமாக மழைக்கசவமிட்ட மரம் ஒன்றிற்கு அதற்காக செலவாகும் தொகையில் 50மூ எனின் 30 ரூபாய் நிவாரணமாகச் செலுத்தப்பட்டுள்ளது

சிறு தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனி தொடர்பாக இதன் கீழ் மானியம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிதிட்டத்தின் முன்னேற்றம் கீழ்வரும் பள்ளிவபர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**மழைக்கவசத்தைப் பயன்படுத்துதல்**

| துறை | மழைக்கவசம் பயன்படுத்தப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்) | மானியமாக வழங்கப்பட்ட தொகை (ரூ. மி) |
|---|---|---|
| சிறு தோட்டங்கள் | 517.01 | 7.73 |
| பெருந்தோட்டக் கம்பனி | 2708.21 | 47.95 |
| மொத்தம் | 3225.22 | 55.68 |

**புள்ளிவிபர அட்டவணை xxi**

## 3.13. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு நிலங்கள் துண்டாடப்படுதலை கட்டுப்படுத்தும் சபையின் நடவடிக்கை

1958 ஆம் ஆண்டின் 02ம் இலக்கம் கொண்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் (துண்டாடுதலை கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் நிலம் துண்டாடப்படுவதை கட்டுப்படுத்தும் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. 20 ஹெக்டயாருக்கு கூடுதலான இறப்பர் தோட்டம் அல்லது அதன் பகுதியொன்று துண்டுகளாக பிரிப்பதற்கு அல்லது விற்பதற்கு தேவையேற்படும் பட்சத்தில் இச்சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இங்கு இந்நிறுவனத்தினால் கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பாக அவதானமாக மீள்பரிசீலனை செய்து மேற்கூறப்பட்ட சபைக்கு சிபாரிசு அனுப்பப்படும். வருடத்தினுள் அனுப்பப்படும் சிபாரிசின் எண்ணிக்கை ஐந்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக கௌரவ அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில் ஒப்படைக்கப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.14. சர்வதேச அமைப்புக்களிலான நடவடிக்கை.

இலங்கையானது சர்வதேச இறப்பர் கல்விக்குழுவில் (IRSG) மற்றும் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தில் (ANRPC) அங்கத்துவம் வகிக்கின்றது. அதற்காக 2013 ம் ஆண்டில் அங்கத்துவப் பணமாக இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்திற்கு ரூபா 974727 உம், சர்வதேச இறப்பர் கற்றல் குழுவிற்கு ரூபா 5304229.38 செலுத்தியுள்ளது.

இந் நிறுவனங்களில் அங்கத்துவம் வகிப்பதனால் அந்நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு நேரடியாக மற்றும் செயற்பாட்டு ரீதியாக பங்குபற்றுவதனூடாக அந்நியோன்யமாக இறப்பர் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு சாதக நிலையை தோற்றுவிக்கிறது. மேலும், இந்நிறுவனங்களுக்கு தேசிய இறப்பர் விலை, உற்பத்தி மற்றும் விற்பனை தகவல்கள், பயிசெய்கை நிலத்தின் அளவு, துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளடங்கிய தேவையான சகல தகவல்களையும் குறித்த நேரத்திற்கு வருடம் முழுவதும் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அந்நிறுவனத்தின் ஊடாக ஏனைய நாடுகளின் தகவல்களையும் பெற்றுக் கொண்டு குறித்த பிரிவினருக்கிடையில் பகிரப்பட்டுள்ளன.

இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தின் (ANRPC) வருடாந்த மாநாடு 2013.10.08 முதல் 2013.10.12 வரை இலங்கையில் நடைபெற்றது. அதற்காக இலங்கை, இந்தியா, பம்பூச்சியா, தாய்லாந்து, வியட்னாம், பப்புவாநியுகிணியா, இந்தோனேசியா, மலேசியா, சீனா போன்ற அங்கத்துவ நகடுகளும் பங்குபற்றியுள்ளன.

இம்மாநாட்டில் ஒன்றுகூடல் நடவடிக்கைகள் மிக வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்ததுடன் அதற்காக இயற்கை இறப்பரை உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தின் (ANRPC) பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பங்குபற்றிய சகல நாடுகளின் அங்கத்தவர்களின் வரவேற்பும் கிடைத்தது.

இம்மாநாட்டில் எதிர்வரும் ஆண்டுகளுக்கான தலைமை இலங்கைக்கு கிடைத்ததுடன் அதன் தலைவராக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 3.15. சட்ட நடவடிக்கை

இறப்பரின் மீள் பயிர் செய்கைக்காக மானிய சட்டத்தின் கீழ் இறப்பர் பயிரிடும் அனுமதி பத்திரத்தின் அடிப்படையில் நன்கொடை பெற்றுக் கொண்ட சகல விண்ணப்பதாரிகளும் அனைத்து நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளும் வரை பயிர்செய்கையினை சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்கு மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிவாண உதவி ஏற்பாடுகளுக்கு உடன்பட்டுள்ளார்கள். அனுமதிபத்திரங்களை வைத்துள்ள அவர்கள் பயிர்செய்கையில் கவனமின்றி இருப்பார்களாயின் மற்றும் இறுதி தவனை நன்கொடையினை பெற்றுக் கொள்ளும் வரை பயிர்செய்கையினை சிறந்த முறையில் பராமரித்துச் செல்லாவிடின் , பயிர்செய்கையினை சிறந்த முறையில் பராமரித்துச் செல்லுமாறு முன்னெச்சரிக்கை செய்தல் அல்லது பெற்றிருக்கும் நன்கொடைகளை திணைக்களத்திற்கு திருப்பி செலுத்துவதற்கு கட்டளையிடப்படும்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் குறித்த சட்டத்திற்கு இணங்க வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் ஆயத்தங்களுக்கு ஏற்ப நன்கொடை பெறும் இடமொன்று இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி அடுத்தவருக்கு உரிமை வழங்கப்பட முடியாது.

இதற்கேற்ப அனுமதி பத்திரத்தின் செல்லுபடியாகும் கால எல்லையை நீடித்து அனுமதிபத்திரகாரருக்கு பயிர்செய்கையினை முழுமையாக்குவதற்கு தேவையான கால எல்லை பெற்றுக்கொடுத்து இறப்பர் மீள்பயிர் செய்கை சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றாத வகையில், வெற்றிகரமாக இறப்பர் பயிர்செய்கையினை நடாத்திச் செல்வதற்கு இயலாமல் போகும் (நன்கொடை பெற்றுக் கொண்ட) இடத்தின் உரிமையாளருக்கு, பெற்றுக்கொண்ட நன்கொடைகளை திருப்பி செலுத்துமாறு அறிவிக்கப்படும். இவ்வாறு திருப்பிச் செலுத்தாத நில உரிமையாளருக்கு இறுதிகட்ட நடவடிக்கையாக வழக்குத் தொடரப்படும்.

**2013 ஏம் ஆண்டு சாத்தியமற்ற பயிர்ச்செய்கைக்காக அறவிடல்**

| மாவட்டம் | அறவீடு செய்யப்பட்ட பயிர்செய்கையாளின் எண்ணிக்கை | இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டு அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா | வழக்குத் தொடரப்பட்டு அறவிடப்பட்டத் தொகை ரூபா |
|---|---|---|---|
| காலி | | | |
| மாத்தறை | 120 | 669679.49 | |
| அம்பாந்தோட்டை | | | |
| கேகாலை | 77 | 652389.67 | 44837.93 |
| மொனராகலை | - | - | - |
| கொழும்பு | 08 | 55034.86 | - |
| இரத்தினபுரி | 26 | 130450.93 | - |
| களுத்துறை | 71 | 320803.00 | - |
| **மொத்தம்** | **302** | **1828357.95** | **44837.93** |

**புள்ளிவிபர அட்டவணை xxii**

மேலும், காலநிலை மற்றும் ஏனைய நியாயமான காரணங்களின் அடிப்படையில் தோல்வியடைந்த பயிர்செய்கைளாயர்கள் தொடர்பில் சட்டத்தின் ஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்தி ஆலோசனை சபையின் அனுமதியைப் பெற்று மானிய உதவியினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3.16. மானியம் வழங்குதல்

மதிப்பீட்டிற்கு உள்ளாகும் 2013 ம் வருடத்தினுள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு குறித்த பயிருக்கான மானிய தொகையை திணைக்களம் வழங்கியது.

**இறப்பர் பயிர் வளர்ப்பிற்காக மானியம் வழங்குதல்**

| கருத்திட்டம் | செலுத்தப்பட்ட முழுத் தொகை ( ரூ.மி) |
|---|---|
| 2013 மீள்பயிரிடல் மானிய உதவி(தனியார்துறை) | 171.31 |
| 2013 புதிதாக பயிரிடல் மானிய உதவி (தனியார்துறை) | 167.73 |
| 2013 மீள்பயிரிடல் மானிய உதவி (பெருந்தோட்டக் கம்பனி) | 97.45 |
| **மொத்தம்** | **436.49** |

**புள்ளிவிபர அட்டவணை xxiii**

## 3.17. விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### 3.17.1. அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்செய்கையை பரப்புதல்

2012ம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட ஆலோசனைக்கு ஏற்ப, அம்பாறை மாவட்டத்தில் இறப்பர் பயிர்செய்கையை பரப்புவதற்கு எடுக்கப்பட் தீர்மானத்திற்கு ஏற்ப 10,000 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிரசெய்கையினை மேற்கொள்ள இலக்கு கொள்ளபட்ட:டுளளது. ஆதற்கிணங்க 2015ம் ஆண்டாகும் போது அவ்விலக்கினை நிறைவேற்றிக் கொள்ளவதற்கு எதிர்பார்க்கும் வகையில் இறபர் பயர்செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ளதுது. இதன் ஆரம்ப படிமுறையாக 2012 ஆம் ஆண்டில் 550 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்செயகை இலக்கு நிலவியதோடு வருட இறுதியில் 137.5 ஹெக்டயார் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்செய்கை மேற்கொளள்பபட்டது. மாஓயா, பதியதலாவ, உகன முதலான பிரதேுச செயலாளர் பிரிவுகள் 03 ற்கும் பகிரந்து செல்லும் வகையில் இறபப்ர் பயிர் செ்யகை நிகழ்ச்சித் திட்டங்கள் பரவலடைந்துக் காணப்பட்டது.

அதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக 2014 ஆண்டில் 402.93 ஹெக்டேயர் பயிரிடப்பட்டது.

### 3.17.2. வடமாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்த்தரித்தல்.

வடமாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை விஸ்த்தரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 3200 ஹெக்டெயாரில் இறப்பர் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தை வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விஸ்த்தரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அவ்மாவட்ட மக்களுக்கு சாத்தியமான சேவைளை திட்டமிடுவதற்காக வவுனிய மாவட்டச் செயலாளர் காரியாலயச் சூழலில் இத்திணைக்கள காரியாலயம் ஒன்று கௌரவ கைத்தொழில் அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் வவுனியா மாவட்டத்தில் 103.25 ஹெக்டெயருக்காக அனுமதிபத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 36.8 ஹெக்டெயரில் இநப்பர் மீள்பயிரிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்காக 2.83 ஹெக்டெயருக்காக அனுமதிபத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.17.3. திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2013

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதோடு, கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான ஆரம்ப அடிப்படைவசதிகளை பரவலாக்கலும், அவர்களின் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக அபிவிருத்திக்கு தேவையான சூழலை உருவாக்கலும், கிராமிய மக்களின் சந்தை தேவைகளை மற்றும் தேசிய பொருளாதார பெறுபேற்றை உச்சளவில் பெற்றுக்கொள்ளக்கூடியதான அடிப்படை வசதிகளை தொடர்புபடுத்தலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பொறுப்பேற்கிறது.

இதன் படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி அனுசரணையோடு நடைமுறைப்படுத்தப்படும் திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இறப்பர் துறையினுள் 2013ம் ஆண்டில் நடைமுறைக்கு உள்ளாகியது. இதன் கீழ் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் வெற்றிட கன்றுகளை நடுவதற்காக இறப்பர் கன்றுகளை இலவசமாக வழங்குதல்,முதிர்ச்சியடையாத இறப்பர் பயிருள்ள காணிகளில் ஊடுபயிர்களாக வாழை, அன்னாசி, கொடித்தோடை முதலானவற்றை பயிரிடுவதற்காக இலவசமாக கன்றுகளை விநியோகித்தல், அறுவடை உதவியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு 50% மானிய அடிப்படையில் பால் வெட்டும் கத்திகளைப பெற்றுக் கொடுத்தல் மற்றும் திணைக்களத்துக்குரிய இறப்பர் நாற்றுமேடைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக நிவாரணம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்புவதற்காக இறப்பர் கன்று விநியோகம் இவ் ஆண்டில் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் மொணராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, வவுனியா, பதுளை ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்களாக இறப்பர் பயிரிடப்பட்ட அனைத்து மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டதோடு, ஊடுபயிர் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டம் மற்றம் பால்வெட்டும் கத்தி விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டம் இறப்பர் பயிரிடும் அனைத்து பிரதேசங்கள் உள்ளடங்களாக அமுல்படுத்தப்பட்டது. திணைக்களத்திடமுள்ள 7 இறப்பர் நாற்றுமேடைகள் 5 மாவட்டங்களில் காணப்படுவதோடு அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இவ்வருடத்தில் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இது வாழ்வெழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதல்முறையாக இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இதன் பெறுபேறாக உயர்தரத்தையுடைய இறப்பர்க் கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந் நிகழ்ச்சித்திட்டமானது பின்னூட்டலாகின்றது. வாழ்வெழுந்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 11 மில்லியன் ரூபாய் தொகை இத்திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்ததோடு அதன் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**வாழ்வெழுச்சித் திட்டதின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | நிதி முன்னேற்றம் | | | பௌதீக முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில்.ரூபா. | செலவு மில்.ரூபா. | % | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மில்.ரூபா. | செலவு மில்.ரூபா. | % |
| வெற்றிடங்களில் நடுவதற்கான இறப்பர் கன்று விநியோகம் (கன்று) | 6.00 | 4.84 | 81 | 100,000 | 80,713 | 81 |
| ஊடு பயிர் செய்கை (கன்று) | 2.00 | 1.75 | 88 | 96,389 | 88,670 | 92 |
| பால் வெட்டும் கத்திகள் விநியோகம் ( கத்தி எண்ணிக்கை) | 0.91 | 0.81 | 89 | 3,020 | 2,799 | 93 |
| அரச நாற்றுமேடைகள் அபிவிருத்தி நடவடிக்கை | 2.09 | 2.82 | 135 | | | |
| 2013 மொத்தம் | 11.00 | 10.22 | 93 | - | - | - |
| 2012 வெற்றிடம் நிரப்புவதற்காக கன்று வழங்குதல். | | 0.77 | | | | |
| மொத்தம் | 11.00 | 10.99 | 100 | | | |

புள்ளிவிபர அட்டணை **xxiv**



வாழ்வெழுச்சியின் பயனுறுதியடைந்த ஆலை



இறப்பர் பாண்ட உற்பத்தித்தொகுத

## 3.18. இணைந்த நிதியம்

| செலவு விடயம் | மொத்த ஒதுக்கீடு கிடைப்பனவு மி. ரூபா | தேறிய செலவு மில். ரூபா |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| தனிநபர் வேதனம் | 149.30 | 148.18 |
| போக்குவரத்துச்செலவு | 9.60 | 9.55 |
| வழங்குதல் | 7.40 | 7.23 |
| பராமரிப்புச்செலவு | 5.48 | 5.31 |
| சேவை | 15.32 | 15.09 |
| அபிவிருத்தி நிவாரணம் | 550.00 | 543.38 |
| மாற்றல் (உதவி பங்களிப்பு தொகை, சொத்துக்கடன் வட்டி) | 16.75 | 12.31 |
| **மொத்தம்** | **753.85** | **741.05** |
| **மூலதனச்செலவு** | | |
| மூலதன சொத்து புனருத்தாரணம் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 17.50 | 14.15 |
| மூலதன சொத்தை எடுத்துக் கொள்ளுதல் | 4.20 | 1.30 |
| முயற்சி மேம்பாடு | 1.00 | 0.94 |
| ஏனைய மூலதன முதலீடு (2502) | 73.30 | 43.66 |
| **மொத்தம்** | **96.00** | **60.05** |
| **முழு மொத்தம்** | **849.85** | **801.10** |

**புள்ளிவிபர அட்டவணை XXV**

## 3.19. செஸ் வரி தொடர்பான நடவடிக்கை

**(1) பதிவு**

| | |
|---|---|
| பதிவு செய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 144 |
| செலுத்த வெண்டிய மொத்தக கம்பனிகள் எண்ணிக்கை | 54 |
| செஸ் செலுத்தும் கம்பனிகளின் எண்ணிக்கை | 48 |

**புள்ளிவிபர அட்டவணை xxvi**

**உள்நாட்டு நுகர்விற்கு ஏற்ப அறவிடப்பட்ட செஸ் வரி**

| குறித்த மாதம் | வருமானம் (உள்நாட்டு நுகர்வுக்கு ஏற்ப) ரூபா |
|---|---|
| ஜனவரி | 29515233.83 |
| பெப்ரவரி | 24569435.17 |
| மார்ச் | 25525488.30 |
| ஏப்ரல் | 15692108.95 |
| மே | 36769749.51 |
| ஜூன் | 14324022.94 |
| ஜூலை | 9420759.37 |
| ஆகஸ்ட் | 18451376.89 |
| செப்டம்பர் | 19947862.08 |
| ஒக்டோபர் | 19151612.94 |
| நவம்பர் | 17332740.24 |
| திசெம்பர் | 34673115.53 |
| **மொத்தம்** | **265373505.75** |

**செஸ் வரி புள்ளிவிபர அட்டவணை -xxvii**

இறப்பர் இறக்குமதி மற்றும் எற்றுமதி அடிப்படையில் அறவிடப்பட்ட செஸ் வரி தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

**இறக்குமதி ஏற்றுமதி அடிப்படையில் செஸ்வரி**

| குறித்த மாதம் | இறக்குமதியின் அடிப்படையில் ரூபா | ஏற்றுமதிமதியின் அடிப்படையில் ரூபா |
|---|---|---|
| ஜனவரி | 6111377.00 | 2116020.00 |
| பெப்ரவரி | 3525902.00 | 4191843.00 |
| மார்ச் | 4804338.00 | 4338920.00 |
| ஏப்ரல் | 3068400.00 | 2509232.00 |
| மே | 5147432.00 | 5845491.00 |
| ஜுன் | 796834.00 | 4179090.00 |
| ஜுலை | 128430.00 | 4581200.00 |
| ஆகஸ்ட் | - | 4639824.00 |
| செப்டம்பர் | - | 4376800.00 |
| ஒக்டோபர் | - | 4660844.00 |
| நவம்பர் | - | 4864163.00 |
| திசெம்பர் | - | 4025762.00 |
| மொத்தம் | 23582713.00 | 50329189.00 |

**செஸ் வரிபுள்ளிவிபர அட்டவணை XXV**

## 3.20. மீள் பயிரிடலுக்கான ஆலோசனை சபை

1953 ஆம் ஆண்டின் 36 ம் இலக்கம் கொண்ட இறப்பர் மீள்பயிரிடல் நிவாரண உதவி சட்டத்தின் 10 வது பிரிவு மற்றும் 1956 ஆம் ஆண்டின் 11 ம் இலக்கம் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 40 மற்றும் 41 ஆகிய பிரிவுகளுக்கு ஏற்ப இச்சபை நிறுவப்பட்டுள்ளது.

இச்சபை இறப்பர் மீள்பயிரிடல் மாணிய சட்டம் தொடர்பாக சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் தொடர்பாக கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு ஆலோசனையை பெற்றுக் கொடுத்தல் மற்றும் இறப்பர் மீள் பயிரிடலுக்கான மாணிய உதவி முறைமையை நிர்வாகம் செய்யும் பொருட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனைகளை பெற்றுக் கொடுத்தல் என்பன இவ் ஆலோசனை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் தலைவர் அதிகார பூர்வமாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாவார். ஏனைய அங்கத்தவர்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.


## 3.21. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

- பிரதானக் காரியாலயத்தில் விடுமுறை பரிசீலனை
- 2011 ஆம் ஆண்டிற்குள்ளான கன்று விநியோகப்பரிசீலணை – மொணராகலை பிரதேசக்காரியாலயம்.
- 2011 ஆம் ஆண்டிற்குள்ளான கன்று விநியோகம் மற்றும் கன்றை சேர்த்தலுக்கான கணனிமயப்படுத்தலைப் பரிசோதித்தல்- மொணராகலை பிரதேசக்காரியாலயம்.
- உள்ளக கணக்காய்வு நிதி மற்றும் முதலாம் பருவ அறிக்கை
- செலுத்திய வவுச்சரைப் பரீட்சித்தல் (2012 இரண்டாம பருவம் ) கொழும்பு பிரதான காரியாலயம்.
- செலுத்திய வவுச்சரைப் பரீட்சித்தல் (2012 மூன்றாம் பருவம் ) கொழும்பு பிரதான காரியாலயம்.
- நாற்றுமேடை விடய கணக்கைப் பரீட்சித்தல். – மீரிகம –நாற்றுமேடை-2012
- நாற்றுமேடை விடய கணக்கைப் பரீட்சித்தல். – வெலிகடமுல்ல. –நாற்றுமேடை-2012
- கன்று போக்குவரத்து லொறி வாகனப் பயணப்பதிவை பரீட்சித்தல் - 2012
- உள்ளக கணக்காய்வ் இரண்டாம் பருவ அறிக்கை- 2013
- செலுத்திய வவுச்சரைப் பரீட்சித்தல் (2012 நான்காம் பருவ- கொழும்பு பிரதான காரியாலயம்)
- நாற்றுமேடை விடய கணக்கைப் பரீட்சித்தல்.– 2012 குருகொடை நாற்றுமேடை
- நாற்றுமேடை விடய கணக்கைப் பரீட்சித்தல்.– 2012 ஏகல்ஓய நாற்றுமேடை
- 2012 அமுலாக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் அரச நாற்றுமேடைகளில் கன்று உற்பத்தி முன்னேற்றத்தை பரிசோதித்தல்.
- உள்ளக கணக்காய்வ் மூன்றாம் பருவ அறிக்கை- 2013
- 2012 ஆம் ஆண்டின் வருடாந்த பயிர்ச்செய்கை இலக்கிற்காக திணைக்களத்தின் ஊடாக கன்றுகளை வழங்குவதற்கு சிரமமாதல்.
- மொணராகலை பிரதேசக்காரியாலயம் - உள்ளக கணக்காய்வு


# 4. பிரதேச அலுவலக முன்னேற்றம்.

நாட்டில் இறப்பர் பயிரிடப்படும் 14 மாவட்டங்களில் சேவை வழங்குவதற்காக 5 பிராந்திய அலுவலகங்களை அமைத்துள்ளதோடு 2018 ஆம் ஆண்டில் அவ்வலுவலகங்களில் பெறப்பட்ட முன்னெற்றம் பின்வருமாறு.


## 4.1. இறப்பர் புதிய பயிரிடல் முன்னேற்றம்





## 4.2. இறப்பர் மீள்பயிரிடல் முன்னேற்றம்




### 4.3. ஊடுபயிர்ச்செய்கை முன்னேற்றம்





### 4.4. மழைக்கவசம் இடல்.




### 4.5. பால்வெட்டுவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்




### 4.6. பால்வெட்டுவோருக்கான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



### 4.7. குத்தகைதாரரை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்








பிரதேச அலுவலகத்தினூடாக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

## 5. ஏனைய நிறுவன சேவைகளை நிறைவேற்றுதல்.

கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் பிரகாரம் வருடத்தில் பின்வரும் நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்துவத்தை ஏற்று பணிக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டன.

1) இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை
2) துருசவிய நிதியம்
3) இலங்கை இறப்பர் உற்பத்தி, ஏற்றுமதி கூட்டுத்தாபனம்
4) தோட்ட காணி துண்டாடலை கட்டுப்படுத்தும் சபை

பணிப்பாளர் சபைக்கூட்ட தவணைகளில் பங்குபற்றுதல், கருத்து மற்றும் ஆலோசனைமுன்வைத்தல் தீர்மானத்திற்காக உதவி வழங்குதல், தேவையான இணக்கப்பாடும் அதிகாரமும் வழங்குதல், நடவடிக்கைளை விசாரணை செய்தல், அந் நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் இதன் மூலம் நிறைவேற்றப்படும்.

இதற்கு மேலதிகமாக திணைக்கள சேவைகள் தேவையான சகல அமைச்சு திணைக்கள, ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவன தனிநபருக்கு அவர்கள் கோரும் சேவைகள்,தகவல் மற்றும் உதவிகள் குறைவின்றி பெற்றுத்தரப்படும். பாடசாலைக் கண்காட்சி உதவி,விரிவுரை மற்றம் தகவல் உதவி. நிறுவனங்களுக்கு மற்றும் தனிநபருக்குத் தேவையான குறியீட்டு தகவல் மற்றும் விளக்கமளித்தல், ஆலோசனைப் போன்றவற்றைப் பெற்றுக்கொடுத்தலும் இதற்குள்ளடங்கும்.

இச்சேவைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் பிரதானக் காரியலயத்திலும் பிரதேசக் காரியங்களிலும் துறைசார் அதிகாரியினதும் நாற்றுமேடை முகாமையாளரதும் துணையுடன் இடம்பெறுகின்றன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஏஎப்2/ஜே/ஆர்ஆர்எஸ்எப்/1/13/எப்ஏ

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2014 ஆகஸ்ட் 27

பணிப்பாளர் நாயகம்,
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

**இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1953 இன் 36 ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதிய அதிகாரச்சட்டத்தின் (437 ஆவது அத்தியாயம்) 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இறப்பர் மீள் நடுகை நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 63,438,233 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியாக இனங்காணப்படாதிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத இச்சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 827,880 தொகை பெறுமானத்தேய்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீடு செய்தலில் வழு மற்றும் நிறுத்திவைத்தல் வரியினைக் கழித்தல் என்பன கவனத்தில் கொள்ளப்படாமையின் காரணமாக நிலையான சொத்து வட்டி வருமானமாக ரூபா 110,849 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுக் கட்டணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முற்கொடுப்பனவுகள் கவனத்தில் கொள்ளப்படாது நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 1,061,126 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 70,659,527 தொகையான இறப்பர் மீள் நடுகை உதவு தொகை நிதியத்திலிருந்து கழித்துக் காண்பிப்பதற்குப் பதிலாக அது நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எந்தச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 63,438,233 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 157,595,843 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 18,868,118 |
| அறவிடவேண்டிய முற்பணங்கள் | 15,220,514 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 84,522 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 383,580 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 468,102 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது.

3.2 செயலாற்றல்

3.2.1 நிதியம் நிலைத்திருத்தல்

செயற்படுகின்ற நிலையில் இல்லாத இந்த நிதியத்தினைக் கலைக்கும் வகையில் உரிய அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நிதியத்தைக் கலைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறவேண்டியிருந்தமை அரசாங்க நிதித் திணைக்களத்தினால் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய பீஎப்/எப்டீ/04/47 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 யூன் 23 ஆந் திகதி வரையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முற்பணங்களைத் தீர்த்துவைத்தல்
(இ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. } ஏஎப் 2/ஜே/ஆர்சீஎப்/1/13/எப்ர

මබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2014 ஆகஸ்ட் 22

பணிப்பாளர் நாயகம்,

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அத்தியாயம்) 39 (அ) (3) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

2. நிதிக் கூற்றுக்கள்

---

2.1 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீகரீதியாகக் காணப்படாத ரூபா 985,925 தொகையான 07 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 84,350 பெறுமதியான தளபாடம், அலுவலக உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் நலன்புரிச் சங்க உபகரணங்கள் போன்ற விடயங்களுக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 805,000 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்படாமல் பொதுத் திறைசேரியின் சேகரித்தல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுக் கட்டணத்திற்காக வழங்கப்பட்ட முற்கொடுப்பனவுகளைக் கருத்திற் கொள்ளாது நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 120,000 தொகையான மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எந்தச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,272 |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 497,051 மிகையைக் காண்பித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் அது ரூபா 463,652 மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 33,399 தொகையான அதிகரிப்பைக் காட்டியது.

### 3.2 செயலாற்றல்

#### 3.2.1 நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்கால நிலைமை

செயற்படுகின்ற நிலையில் இல்லாத இந்த நிதியத்தினைக் கலைக்கும் வகையில் உரிய அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நிதியத்தைக் கலைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறவேண்டியிருந்தமை அரசாங்க நிதித் திணைக்களத்தினால் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய பீஎப்/எப்டீ/04/46 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 யூன் 23 ஆந் திகதி வரையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி